## கிருஷ்ணகிரி சமூக காடுகள் மற்றும் விரிவாக்க கோட்ட வன அலுவரின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை: திரு.N.சக்திவேல், பி.எஸ்.ஸி.,
கோட்ட வன அலுவலர் (மு.கூ.பொ).

-----

செ.மு.ஆ.எண்.2636/2022/ப நாள்.13.09.2023

பொருள்: பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – காலஞ்சென்ற அரசு ஊழியர் – A.பெருமாள், வனக்காப்பாளரின் வாரிசுதாரர் திரு.P.வெங்கட்ராமன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்தது – பணி வரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத்தலைவர் சென்னை ந.க.எண்.W2/ 18995/2015 நாள்.4.08.2022.
2 வனப்பாதுகாவலர், தருமபுரி மண்டலம், தருமபுரி ந.க.எண். 7592/2022/பொ2 நாள்.12.8.2022
3 இவ்வலுவலகசெ.மு.ஆ.எண்.2636/2022/ப நாள்.17.8.2022 மற்றும் 28.10.2022.
4 அரசாணை எண்.G.O.Ms.No.18 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள்.23.01.2020.
5 அரசாணை எண்.G.O.Ms.No.33 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை கி1 நாள். 08.03.2023.

--------

பார்வை 1 மற்றும் 2–ல் காணும் ஆணைகளின்படி ஒசூர் வனக்கோட்டம் ஒசூரில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வந்த இவர் பணிக்காலத்தில் மரணமடைந்த A.பெருமாள் என்பவரின் மகன் திரு.P.வெங்கட்ராமன், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக 17.08.2022 மு.ப முதல் கிருஷ்ணகிரி சமூக காடுகள் மற்றும் விரிவாக்க கோட்டத்தில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே திரு. P.வெங்கட்ராமன், இளநிலை உதவியாளர் அவர்களின் கல்வி தகுதிச்சான்று பணியமர்வு தொடர்பான பிற சான்றுகளின் உண்மைத்தன்மை மற்றும் உடற்தகுதி சான்றுகள் சரிபார்க்கப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதால் பார்வை 4 மற்றும் 5–ல் காணும் அரசாணையின்படியும், தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 28–ன் படியும், தனியர் பணியில் சேர்ந்த நாளான 17.08.2022 மு.ப முதல் பணி வரன்முறை செய்யப்பட்டு மூன்று ஆண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு பணிக்காலம் தகுதிக்காண் பருவத்தில் வைத்து ஆணை வழங்கப்படுகிறது.

கோட்ட வன அலுவலர் (மு.கூ.பொ),
சமூக காடுகள் மற்றும் விரிவாக்க கோட்டம்,
கிருஷ்ணகிரி.

பெறுதல்
திரு.பி.வெங்கட்ராமன் (நேரில்)
இளநிலை உதவியாளர்,
சமூக காடுகள் மற்றும் விரிவாக்க கோட்டம்,
கிருஷ்ணகிரி.

நகல் : செயல்முறை ஆணை கோப்பிற்கு
நகல் : பணிப்பதிவேடு